No. of Printed Pages : **7**

**6675**

| பதிவு எண் Register Number | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

# பகுதி - III — சிறப்புத் தமிழ்
# Part - III — ADVANCED LANGUAGE — TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக விளங்குபவை :

(அ) சங்க இலக்கியங்கள் (ஆ) இடைக்கால இலக்கியங்கள்

(இ) இக்கால இலக்கியங்கள் (ஈ) பக்தி இலக்கியங்கள்

**2.** சொற்றொடர் நிலை என்பது :

(அ) அந்தாதி (ஆ) பரணி (இ) தூது (ஈ) கலம்பகம்

**3.** தமிழில் வெளிவந்த முதல் பேசும் படம் :

(அ) ராஜா ஹரிச்சந்திரா (ஆ) சீனிவாசக் கல்யாணம்

(இ) காளிதாஸ் (ஈ) கீசகவதம்

[ திருப்புக

4. பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள புதினங்களில் அதே பெயரில் திரைப்படமாக எடுக்கப்பட்ட புதினம் :

(அ) செம்மீன் (ஆ) சாயாவனம் (இ) தாய் (ஈ) மாறுதல்

5. ''ஒழுக்கம் இருக்குதே அதுதான் பொண்ணே பெரிசு. மரக்காத்தி ஒழுக்கம்தான் மரக்கானுக்குச் சொத்து'' – யார் கூற்று ?

(அ) சக்கி (ஆ) பரீக்குட்டி (இ) கறுத்தம்மா (ஈ) பஞ்சமி

6. கணையாழி இலக்கிய மாத இதழில் பல ஆண்டுகளாக ஆசிரியராகப் பணியாற்றியவர் :

(அ) ஹெப்சிபா ஜேசுதாசன் (ஆ) அசோகமித்திரன்

(இ) சுஜாதா (ஈ) கல்கி

7. சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு :

(அ) 1895 (ஆ) 1894 (இ) 1897 (ஈ) 1896

8. உற்சாகம், நல்லெண்ணம், பெருமகிழ்ச்சி ஆகிய உணர்வுகளைக் காட்டப் பயன்படுத்தப்-படும் வண்ணம் :

(அ) சிவப்பு (ஆ) மஞ்சள் (இ) கருநீலம் (ஈ) பச்சை

9. கீழ்க்கண்டவற்றுள் எவை ஆபாச வெளியீட்டுத் தடைச்சட்டத்தின் படி தண்டனைக்-குரியவை ?

(1) நாகரிகமற்ற வார்த்தைகள்

(2) நீதிமன்றத் தீர்ப்பை விமர்சித்தல்

(3) பாலினத்தை இழிவுபடுத்தும் கருத்துகள்

(4) ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு எழுதுவது

(அ) (1) மற்றும் (3) (ஆ) (1), (2) மற்றும் (3)

(இ) (1) மற்றும் (4) (ஈ) (1), (3) மற்றும் (4)

**10.** பாலராமாயணம் என்ற வானொலி நிகழ்ச்சிக்கு இசை அமைத்தவர் :

(அ) மல்லிக் (ஆ) டி.கே. பட்டம்மாள்

(இ) முத்துக் கூத்தன் (ஈ) எஸ். ராஜம்

**11.** மொழியியலும் கணினி அறிவியலும் இணைந்தது :

(அ) கணினி தொழில்நுட்பம் (ஆ) கணினி அறிவியல்

(இ) கணினி பொறியியல் (ஈ) கணினி மொழியியல்

**12.** பேரிடர்க் காலத்தில் பெரிதும் பயன்படுவது :

(அ) ஹாம் வானொலி (ஆ) தொலைக்காட்சி

(இ) இணையம் (ஈ) அலைபேசி

**13.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) | பொன் விளையும் பூமி | (i) | சிறுவர் நிகழ்ச்சிகள் |
| (2) | கண்மணிப் பூங்கா | (ii) | நேயர் கடிதங்கள் |
| (3) | எதிரொலி | (iii) | நன்னெறிக் கதைகள் |
| (4) | இன்று ஒரு தகவல் | (iv) | வேளாண் நிகழ்ச்சிகள் |

(அ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

(ஆ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)

(இ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)

(ஈ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

**14.** ''வானொலியின் தந்தை'' என்று அழைக்கப்படுபவர் :

(அ) எடிசன் (ஆ) மார்கோனி

(இ) பெஞ்சமின் (ஈ) ஜான் லூகி பெயர்டு

**15.** தம் மன்னன் மறைவிற்காகக் குடிமக்கள் வருந்திப் பாடுவதாக அமைந்த துறை :

(அ) பொருண்மொழிக்காஞ்சி (ஆ) கையறு நிலை

(இ) இயன் மொழி (ஈ) செவியறிவுறூஉ

**16.** கீழ்க்காண்பனவற்றுள் சாகித்ய அகாதெமி விருது பெறாத புதினம் :

(அ) சஞ்சாரம் (ஆ) வானம் வசப்படும்

(இ) ரத்தம் ஒரே நிறம் (ஈ) காவல் கோட்டம்

**17.** ''புத்தம் வீடு'' கதையில் வரும் அக்கானி என்பது :

(அ) கதாபாத்திரத்தின் பெயர் (ஆ) வீட்டின் ஒரு பகுதி

(இ) குடிக்கும் பானம் (ஈ) பனையேற உதவும் ஒரு கருவி

**18.** ''பள்ளிக் கூடத்தைப் பார்வையிட்டார் கல்வி அலுவலர்'' – இத்தொடரில் வினைமுற்று எங்கு இடம் பெற்றுள்ளது ?

(அ) தொடரின் இறுதியில் (ஆ) தொடரின் முதலில்

(இ) தொடரில் இடம்பெறவில்லை (ஈ) தொடரின் இடையில்

**19.** ''திறனாய்வு என்று கூறினால், முடிவு கூறல் - அதனுள் அடங்கியிருத்தல் கண்கூடு'' என்று கூறியவர் :

(அ) மேத்யூ ஆர்னால்டு (ஆ) விக்டர் யூகோ

(இ) அ.ச. ஞானசம்பந்தம் (ஈ) ஸ்பிங்கான்

**20.** வேர்ச்சொல் ஆய்வுக்கான தரவுகளுள்ள தொல்காப்பிய இயலைத் தேர்ந்தெடுக்கவும் :

(அ) இடையியல் (ஆ) பெயரியல் (இ) உரியியல் (ஈ) வினையியல்

## பகுதி - II

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்க வேண்டும். **7x2=14**

**21.** தீராவைப் பற்றி எழுதுக.

**22.** ராகினியைக் கணக்குப்பிள்ளை வேலைக்கு அமர்த்தியதற்கு ஆர்.ஆர்.எம். மேனேஜரிடம் கூறிய காரணங்கள் யாவை ?

**23.** சாயாவனம் புதினத்தில் இடம்பெறும் செடி கொடிகளின் பெயர்களை எழுதுக.

**24.** ஒரு வரிக்கதை என்றால் என்ன ?

**25.** உலகளாவிய திரைப்பட விருதுகளில் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.

**26.** தமிழ்மொழி வழங்கும் நிலப்பரப்பு குறித்துத் தொல்காப்பியம் கூறுவது யாது ?

**27.** மின்னூல் – வரையறுக்கவும்.

**28.** மின்னணு ஊடகங்கள் என்று அழைக்கப்படுவன யாவை ?

**29.** கல்கியின் சமூகப் புதினங்களைக் குறிப்பிடுக.

**30.** செவ்வியல் மொழிகள் என்றால் என்ன ?

[ திருப்புக

## பகுதி - III

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**31.** ஐம்பெருங் காப்பியங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.

**32.** கதைப்பின்னல் – வரையறுக்கவும்.

**33.** சங்கத்தில் சேர்வதால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளாகச் சுசீலா கூறியவை யாவை ?

**34.** செம்மீன் புதினத்தில் சக்கி கூறும் கற்புடையாள் கதையை எழுதுக.

**35.** நவீன நாடகத்தின் நோக்கம் குறித்து எழுதுக.

**36.** இயல்பான அகராதியும், வேர்ச்சொல் அகராதியும் ''உவரி'' என்னும் சொல்லுக்கு எவ்வாறு விளக்கமளிக்கின்றன ?

**37.** நடமாடும் ஒளி - ஒலிப்பதிவுக் கூடம் என்றால் என்ன ?

**38.** வானொலியில் வழங்கப்படும் உழவர்களுக்கான நிகழ்ச்சிகள் யாவை ?

**39.** செல்பேசிகளில் காணப்படும் வன்பொருள் கூறுகளைப் பட்டியலிடுக.

**40.** 5 ஜி தொழில் நுட்பம் குறித்தும், அதன் சிறப்புகள் குறித்தும் நீவிர் அறிந்தவற்றைக் கூறுக.

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**41.** (அ) பெரியபுராணம் குறித்து நும் பாடப்பகுதி கூறும் கருத்தினைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) ''சங்ககாலத்தில் வீரம் சிறந்திருந்தது'' என்பதை வெண்ணிக்குயத்தியாரின் புறநானூற்றுப் பாடல் வழி விளக்குக.

**42.** (அ) ''வாழ்வின் சிறுசிறு பிரச்சனைகளை நேர்மறையாக எதிர்கொள்ளும் மனப்பாங்கே சிறந்தது'' – இக்கூற்றைப் பங்கஜம் கதாபாத்திரம் வழி நிறுவுக.

**அல்லது**

(ஆ) நவீன நாடகத்தின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்து விளக்குக.

**43.** (அ) திரைப்பட தயாரிப்பில் கலை நுட்பங்கள் எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை நிறுவுக.

**அல்லது**

(ஆ) தகுதி வழக்கில் ஏற்படும் சொற்பொருள் மாற்றம் குறித்து எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**44.** (அ) ''படைப்பாளிக்கும், படிப்பவருக்கும் இடையே பாலமாக விளங்குவது திறனாய்வு'' – இக்கூற்றை விளக்குக.

**அல்லது**

(ஆ) கல்மரம் புதினத்தில், சுசீலா கட்டடத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொகுத்து எழுதுக.

**45.** (அ) திறனாய்வு அணுகுமுறைகளுள் எவையேனும் இரண்டைப் பற்றி விரிவாக எழுதுக.

**அல்லது**

(ஆ) ஊடக சட்டங்களுள் எவையேனும் ஐந்தனை எழுதுக.

**46.** (அ) மின்னூலின் சிறப்பம்சங்களைப் பட்டியலிடுக.

**அல்லது**

(ஆ) செல்பேசியில் மென்பொருளின் பங்கு குறித்து விவரிக்கவும்.

**47.** (அ) தமிழ்த் திரைப்பட வரலாறு பற்றி நீவிர் அறிவன யாவை ?

**அல்லது**

(ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியின் தொடக்க விழாவிற்கு நிகழ்ச்சித் தொகுப்புரை ஒன்று எழுதுக.

- o O o -